
ஓம்





ஸ்ரீமதி

தங்கம்மா பொன்னுச்சாமிக் குருக்கள்

அவர்கள்

7-2-1992 இல் சிவபதம் அடைந்தமை குறித்த

# ஞாபக மலர்

பாலர் ஞானோதய சபையின்

இருபதாவது வெளியீடு

பிரசோற்பத்தி மாசி மீ 4உ.

16-2-92

காசிவிநாயகர் தேவஸ்தானம்

தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

விநாயகர் துணை

# ஸ்ரீமதி தங்கம்மா பொன்னுச்சாமிக் குருக்கள்

அவர்கள்



தோற்றம்
06-02-1909

மறைவு
07-02-1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனித்துவம்மிக்கவர்

## ஸ்ரீமதி தங்கம்மா அம்மா அவர்கள்

# வாழ்வியல் நோக்கு..,

இற்றைக்கு ஏறக்குறைய எண்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சாவகச்சேரியின் ஒரு பகுதியாகிய மீசாலைக் கிராமத்தில் செல்லையா ஐயர் - பர்வத அம்மாள் தம்பதிகளுக்குப் புத்திரியாகப் பிறந்தவர் தான் தங்கம்மா அம்மா அவர்கள். இவருக்கு மூன்று ஆண் சகோதரர்களும், ஒரு பெண் சகோதரியும் இருந்தனர். இவர் மேற்படி கிராமத்தில் வளர்ந்து கல்வி கற்று, உரிய வயதை அடைந்தபோது பொன்னுச் சாமிக் குருக்களுக்கும் இவருக்கும் திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்தின் விளைவாக சாவித்திரி, சந்தானலட்சுமி என்னும் இரு பெண் பிள்ளைகளும், கருணாகரன் என்னும் ஓர் ஆண் மகனும் பிறந்தனர். மகன் கருணாகரன் கல்வி கற்று வரும் நாளில் ஓர் தினம் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்குண்டு தமது எட்டாவது அகவையின் போது அகால மரணத்தைத் தழுவிக்கொண்டார். இதனால் பெருந் துயருற்ற பொன்னுச்சாமிக் குருக்கள் தம்பதிகள் தமது மகனின் இழப்பின் பின் பெண் பிள்ளைகள் இருவரையும் கல்வி கற்கச் செய்ததுடன் வாழ்வாங்கு வாழவும் வழிசமைத்துக் கொடுத்தனர்.

மூத்தமகள் சாவித்திரி அம்மாளுக்கும் - நடேசசர்மா அவர்களுக்கும் உரிய காலத்தில் திருமணம் நடைபெற்றது. இவர்களுக்குக் கோபால கிருஷ்ண சர்மா என்னும் புதல்வன் பிறந்தார். இவை நடைபெற்றுச் சில ஆண்டுகள் சென்ற பின் சாவித்திரி அம்மாள், அன்னாரது தந்தையார் பொன்னுச்சாமிக் குருக்கள் ஆகியோர் சிவபதம் அடைந்துவிட்டார்கள். தங்கம்மா அம்மாவே இளையமகளையும் பேரனையும் வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவர்களை நல்ல முறையில் வளர்த்துக் கல்வி புகட்டினார். 1950ம் ஆண்டு காலப்பகுதியில் சேதுபதி அம்மா பாலசுப்பிரமணியக்குருக்கள் தம்பதிகள் மூலம் தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தானத்துடன் தொடர்பு பூண்டார். பாலர் ஞானோதய சபையின் ஆண்டுவிழா ஒன்றிற்குச் சமூகம் கொடுத்த இவர் காசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரலனை தரிசனஞ் செய்தார். அதன் மேல் தனது இளைய மக ளையும் பேரனையும் மேற்படி ஆலயத்துக்குக் கொண்டு வந்து சேர்ந்துத் தமது கடமையை நிறைவு செய்தார்.

தங்கம்மா அம்மா அவர்கள் தனித்துவம் மிக்கவர். விநாயகரிடத்தே தீவிரபக்தி பூண்டவர். மீசாலையில் வசிக்கும் காலத்தில் ஒரு விநாயகரை வைத்து வழிபாடு செய்து வந்தார். " பூக்கொண்டு துய்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு " என்ற ஔவை வாக்கிற்கு இணங்க நெல்லிப்பழை காசி விநாயகரைத் தினமும் வழிபாடு செய்து வந்தார். அம்மையார் அவர்கள் தர்மசிந்தை மிக்கவர். எவருக்கும் எதையும் கொடுக்கும் சுபாபம் உடையவர். இனத்தவர்களுக்கும், அயலவர்களுக்கும் வேண்டிய உதவிகளை வேண்டிய காலங்களில் செய்து வந்தார். தனது மகன், மருமகன். பூட்டன் ஆகியோர் நலமாக வாழ்தல் வேண்டும் என்ற விருப்புக் கொண்டவர்.

இவரது பேரனாகிய கோபாலகிருஷ்ணசர்மா ( இன்று கொழும்பில் வசிப்பவர் ) மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட உருக்குமணி அம்மாளை விவாகம் செய்து அதன் மூலம் குமரேஸ்வரன் என்னும் புத்திரனைப் பெற்றார். பேரனாகிய கோபாலகிருஷ்ணனை வளர்த்து ஆளாக்கிய பெருமையும் இவருக்கு உண்டு.

இவ்வாறாக தமக்கும், பிறர்க்கும் அளப்பரிய சேவைகளை ஆக்கியவரும், தாய்க்குலத்தின் வழிகாட்டியாக வாழ்ந்தவருமான தங்கம்மா அம்மையார் அவர்கள் 07 . 02 . 92 வெள்ளிக்கிழமை நண்பகல் விநாயக சதுர்த்தியிலன்று இறைவன் திருவடியில் சேர்ந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை



## விநாயகர் துதி

### காப்பு

கரும்பு மிளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பு மவல்பலவு மேன்மே - வருந்தி
குணமுடைய ராயிருந்து குற்றங்கடீர்க்குங்
கணபதியே யிக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனி லேறி
வருமான்று வீன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா வுனைத் தொழுவே
னென் கதைக்கு நீயென்றுங் காப்பு

### துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு - மொருவாக்கு
மாதலால் வானோர்க ளானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை

ஒற்றை மருப்பு மோரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தி லெப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௮

# சிந்தனை செய் மனமே

காகமுறவு கலந்துண்ணக்
கண்டீர் கண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
வேக வுருவாய்க் கிடக்குதையோ
விற்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாருஞ் சகத்தீரே

சைவ சமய மேசமயஞ்
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிக்
காட்டு மிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி
புகுத வேண்டா முத்தி தருஞ்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் செகத்தீரே..

இகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி விளம்பல்

ஸ்ரீமதி தங்கம்மா அம்மா
அவர்களின் இறுதிக் கிரியைகளிலும் மற்றும்
திசாகம் முதலாய தான வகைகளிலும்
பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பான நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

காசிவிநாயகர் தேவஸ்தானம்
தெல்லிப்பழை

குடும்பத்தினர்

தயா அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org